"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"
ஆமோஸ் 4:12.

தேவ எக்காளம்

"என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்"
(ஓசியா 8:12)

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்"
(சங். 1:2)

"உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை" (சங். 119:165)

கீழ்த்திசையில் பிறந்து, கிழக்கத்திய பாணியில் உடுத்துவிக்கப்பட்ட என் அருமை வேதப்புத்தகமே, இவ்வுலகிலுள்ள அனைத்து

Vol. 14] மார்ச் 1982 [No. 3

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய *7* ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் *200* ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8)* உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.
WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தேசங்களையும் உனது பழக்கப்பட்டப் பொற்பாதங்களால்
வொன்றாகச் சென்று சந்தித்து உன்னுடைய சொந்தஜனங்களை
காங்கு எல்லாவிடங்களிலும் தெரிந்துகொள்ளச் செல்லுகின்
இப்பூவுலகில் மனுமக்கள் அனைவரின் நெஞ்சங்களிலும் பேசி, உ
வாடி மகிழ அநேக நூற்றுக்கணக்கான பாஷைகளை நீ கற்று
கொண்டாய். அரண்மனையில் இராஜ சிங்காசனத்தில் கொலுவி
ருக்கும் முடிசூடிய மன்னனிடம் சென்று "நீ உன்னத தேவன்
தாழ்ந்த ஊழியன்" என்றும், குடிசையில் வாழும் ஏழை குடியான
னிடம் சென்று "நீ மாபெரும் தேவனின் சொந்தப்பிள்ளை" என்று
நீ கூறுகின்றாய்.

ஆச்சரியத்தோடும், பேருவகையோடும் பாலர் உனது கதை
களைத் தங்கள் செவிசாய்த்துக் கேட்கின்றனர். ஞானிகள் உன்
முள்ள வாழ்வின் உவமைகளை ஆழ்ந்து சிந்திக்கின்றனர்.

என் வியாகுல நேரத்தில் ஒரு ஆறுதலான வார்த்தையும்
எவ்வழியாக நான் இனி என் பயணப் பாதையைத் தொடருவேன்
என்று நான் அங்கலாய்க்கின்ற நேரத்தில் ஒரு ஒளியின் வார்த்தை
யையும், என் உள்ளம் தடுமாற்றங்கொண்டு, கொந்தளித்துக் கொ
றும் வேளையில் ஒரு சமாதானத்தின் வார்த்தையையும் உன்னகத்தே
எப்பொழுதும் கொண்டிருக்கின்றாய். உனது தேவவாக்குகள் ஜன
திரள்கள் மத்தியில் ஓய்வின்றிப் பேசப்பட்டு வருகின்றன. தவித்து
துன்பத்தில் மூழ்கியிருப்போனுக்கு உன் இதமான ஆலோசனை
மட்டற்ற இன்பமளிக்கின்றன.

துன்மார்க்கரும், மனமேட்டிமையானோரும் உனது எச்சரிப்பு
களால் நடு, நடுங்குகின்றனர். ஆனால், இருதயம் நொறுங்குண்
டோரும், சிறுமைப்பட்டோரும் உனது தாயடைவான அன்பின்
வார்த்தைகளால் ஆற்றித் தேற்றப்படுகின்றனர். வனாந்திரமும்,
அவாந்திர வெளியும் உன்னிமித்தம் களிகூருகின்றன.

இந்த அரும் பெரும் பொக்கிஷமாகிய உன்னைத் தன் சொந்த
மாக வைத்துக்கொள்ள இவ்வுலகிலுள்ள எந்த ஒரு மனுஷனும்
அத்தனை ஏழையாகப் போய்விடவில்லை.

பூலோக யாத்திரையின் இறுதிக் கட்டத்தில் செல்லும் ஏழை
மோட்சப் பயணி மரண நிழலின் பள்ளத்தாக்கண்டை வந்து சேரு
கின்றான். ஆனால், அதின் வழியாகக் கடந்து செல்ல அவன் கொஞ்
சமும் அச்சமுறுவதில்லை. உனது வாக்குத்தத்தமாகிய கோலை
தடியையும் அவன் தனது கரங்களில் துணிவுடன் எடுத்துக்
கொண்டு, தன்னைச் சூழ்ந்து நிற்கும் தன் நண்பர்களிடமும், அன்
பானவர்களிடமும் மகிழ்ச்சியுடன் விடை பெற்றுக்கொண்டு "நாம்
மீண்டும் மோட்சத்தில் சந்திப்போம்" என்ற பேரானந்த வார்த்
தைகளை உதடுகளால் உச்சரித்துக் கொண்டே தனக்கு முன்
னுள்ள மரணத்தின் தனித்ததும் இருண்டதுமான பாதையை
நோக்கி ஆனந்தக் களிப்புடன், ஒளி நிறைந்த பாதையில் ஒருவன்
தடுமாற்றமின்றிச் செல்லுவதைப் போன்று பயணமாகின்றான்.

HENRY VAN DYKE

ர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் பெருக்
உண்டாவதாக. ஆமென்.

நேப்பாள நாட்டில் கர்த்தருடைய ஊழியங்களை நான் முடித்
துக் கொண்டு அந்நாட்டின் முதல் பட்டணமும், இந்திய தேசத்
தின் எல்லைக்கு மிகவும் அருகிலுள்ளதுமான பைரபா என்றவிடத்
தில் வந்து இராத்தங்கி மறுநாள் காலையில் சுனௌலி என்றவிடத்
திற்கு வந்துசேர்ந்தேன். இங்குதான் நேப்பாளத்தையும், இந்தியா
வையும் சேர்ந்த சுங்க அதிகாரிகள் வெளியே செல்லும் குடி மக்
களைக் கடுமையாகப் பரிசோதனை போட்டு அனுப்புகின்றார்கள்.
நான் அங்கு வரவும் கோரக்பூர் செல்லும் பஸ் ஆயத்தமாக நின்று
கொண்டிருந்தது. சுங்கச் சாவடியில் நல்ல கூட்டம். நேப்பாள
சுங்க அலுவலகத்தில் சோதனை முடித்து, இந்திய அலுவலகத்தில்
பரிசோதனை முடிப்பதற்குள் எத்தனை மணி நேரமாகுமோ என்று
மனதில் கவலையுடன் எண்ணிக்கொண்டு உடனே பரலோகத்திற்கு
எனது தந்தி ஜெபத்தை ஏறெடுத்தேன். "என் அருமைக் கண்
மணியே, நேப்பாள தேசத்தில் தம்முடைய ஊழியத்தைச் செய்து
விட்டு நான் திரும்புகின்றேன் என்பதுவும், அரசாங்கக் கட்டுப்பாடு
களுக்கு விரோதமாக நான் எந்தப் பொருட்களையும் நேப்பாளத்தி
லிருந்து மறைத்து எடுத்துக்கொண்டு செல்லவில்லை என்பதுவும்
உமக்குத் தெரியும். அது மட்டுமல்ல, இன்றைய தினமே கோரக்
பூரிலிருந்து ஜான்சி பட்டணம் செல்லுவதற்கான ரிசர்வேஷன் டிக்
கெட் என்னிடம் உள்ளது என்பதுவும் நான் இங்கிருந்து சரியான
நேரத்திற்குச் செல்லவில்லையெனில் கோரக்பூரிலிருந்து ஜான்சிக்கு
மகா கஷ்டத்துடன் பிரயாணம் செய்யவேண்டும் என்பதையும் அது
என்னால் கூடாத காரியம் என்பதையும் தேவரீர் அறிவீர். கிருபை
யாக எனக்கு இரங்கி உடனே நன்மை செய்யும்" என்று என்
மனதிற்குள் ஜெபித்து நேப்பாள சுங்க அலுவலகத்திற்குச் சென்
றேன். என்ன ஆச்சரியம்! நேப்பாள அதிகாரி ஒருவர் என்னைக்
கண்ட மாத்திரத்தில் காத்திருக்கும் எல்லாரையும் விட்டு விட்டு
என்னண்டை வந்து என் பெட்டியைத் திறந்து அதில் பார்த்ததெல்
லாம் தோல் கட்டுமானம் செய்து ஜிப் வைத்த என்னுடைய அழகிய
வேதபுத்தகத்தை மாத்திரம்தான். புரட்டிப், புரட்டி ஆசையுடன்
பார்த்து விட்டு இது என்னவென்று கேட்டார். பைபுள் புத்தகம்
என்று சொன்னபோது மிகவும் வியப்புற்றார்.

உடனே இந்திய அலுவலகத்திற்குச் சென்றேன். அங்கும்
அற்புதம் நிகழ்ந்தது. ஒரு அதிகாரி வந்து என்பெட்டியை சோத
னையிட முயற்சித்தபொழுது மேலதிகாரி அவரைப்பார்த்து "அந்த
ஆளுடைய பெட்டியை சோதனையிட என்ன அவசியமிருக்கின்றது?
யாரைச் சோதனை பண்ணவேண்டும், யாரைசோதனைபண்ணகூடாது

என்பதுவும் உனக்குத்தெரியாதா? அவருடைய முகத்தைப்பார்த்தால் உனக்குப் புரியவில்லையா? அவர் எதுவுமே திருட்டளவாகக் கொண்டு செல்லமாட்டார். பெட்டியைமூடி அவரை உடனே அனுப்பு. பஸ் அதோ ஆயத்தமாய்நின்று கொண்டிருக்கின்றது, உடனே அவர் போகட்டும்" என்றார். அல்லேலூயா. அந்த அதிகாரிக்கு எனது வணக்கத்தைச் செலுத்தினேன். 10 நிமிடங்களுக்குள்ளாக எனது காரியங்கள் எல்லாம் முடிவுற்று மிகுந்த மகிழ்ச்சியுடன் நான் பஸ்ஸிலும் ஏறிப்பயணப்பட்டுவிட்டேன்.

ஆண்டவருடைய இவ்விதமான எல்லையற்ற தேவ அன்பின் ஆழத்தை என்னவென்று சொல்லுவது! நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அன்பின் கர்த்தர் எத்தனையோ காரியங்களுக்கு உடனுக்குடன் பதில்கொடுத்து நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிடுகின்றார். அந்த நேரங்களில் ஆனந்தக்கண்ணீர் நம்மில் பொங்கி வழிகின்றது. மற்றவர்களுக்காக நாம் மன்றாடி ஜெபிக்கும்போதும் உடனே அந்த ஜெபங்களைக்கேட்டு வியாதிகளிலிருந்து விடுதலையையும், இரட்சிப்பையும் இன்னும் பலத்த காரியங்களையும் செய்கின்றார்.

இந்த தலையங்கம் எழுதப்படுவதற்குச் சிலமணி நேரங்களுக்கு முன்பாக வந்த இருகடிதங்களைத் தேவநாம மகிமைக்காக இங்கு குறிப்பிடுகின்றேன்.

ஒரு கடிதத்தில்:-

"நீங்கள் வந்து கூட்டத்தில் கலந்துகொண்டமைக்காக மிகவும் நன்றி. தொடர்ந்து இவ்வூழியங்களை உங்கள் ஜெபத்தில் நினைவு கூருங்கள், இக்கூட்டங்களுக்குப்பின்பு எனது மகன்கள் பென்னி, டேனி இருவரும் ஒருநாள் தங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து அதிகமாக அழுது ஏறத்தாழ அரை மணிநேரம் ஜெபித்தார்கள். அதற்குப்பின்பு அவர்களுக்குள் ஓரளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் இவ்வனுபவத்தில் வளர, பலப்பட அதிகம் ஜெபியுங்கள்".

மற்றொரு கடிதத்தில்:-

"கர்த்தருக்குள் அன்புள்ள அண்ணன், என் தம்பிக்கு இப்பொழுது பரவாயில்லை. நல்ல சுகம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்".

இப்படியாக அன்பின் நேசர் நம்மில் அநேகரை மற்றவர்களின் ஆன்மீக, சரீர ஆசீர்வாதங்களுக்குகந்த நிலையில் அற்புதமாகப் பயன்படுத்திவரும் நேரத்தில் நம்முடைய சொந்தக் குடும்ப நிலைகளில்தானே அநேக கண்ணீரின் பள்ளத்தாக்குகளினூடே பயணப்பட்டுச் செல்ல நேசர் நம்மை அன்புடன் அனுமதித்துவிடுகின்றார். நம்முடைய வாழ்க்கையையே கசப்பாக்கி நம் உள்ளத்தைத் தினமும் கசக்கிப் பிழியும் சில காரியங்களில் அன்பர் ஆழ்ந்த

அமைதியாயிருக்கின்றார். இந்தக் காரியங்களுக்காக நாம் எத்தனை கண்ணீர், எத்தனை அழுகை, எத்தனை உபவாசம், எத்தனை ஜெபம், எத்தனை பாவ அறிக்கைகள் ஏறெடுத்தாலும் அவை அனைத்தும் விளலுக்கிறைத்த நீராக வீணாகி முடிவதாய் நமக்குத் தோன்றுகின்றது. "........என் ஜெபமும் என் மடியிலே திரும்ப வந்தது" "என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன்; அதுவும் எனக்கு நிந்தையாய் முடிந்தது. இரட்டை என் உடுப்பாக்கினேன்; அப்பொழுதும் அவர்களுக்குப் பழமொழியானேன்" (சங். 35:13; 69:10,11) என்ற தாவீது ராஜாவின் துயர அனுபவமே நம்முடைய அனுபவமாகிவிடுகின்றது.

கர்த்தருடைய ஊழியத்தின் பாதையில் ஒரு சமயம் நான் வட இந்திய பட்டணமாகிய டேராடூன் சென்றிருந்தபோது அப்பட்டணத்து வீதியொன்றிலே ஒரு மாயவித்தைக்காரன் மாயா ஜாலக் காட்சிகளைக் காண்பித்துக் கொண்டிருந்தான். அவனின் அக்காட்சிகளை ஒரு கூட்டம் மக்கள் வியப்புடன் கண்டு களித்துக்கொண்டிருந்தனர். சில நிமிடங்களுக்குள்ளாக ஒரு மாஞ்செடியை முளைத்து வரப்பண்ணி ஒரு மாம்பழம் அதில் தொங்கிக் கொண்டிருப்பதையும் கூட்டத்தினருக்குக் காட்டினான். அது மட்டுமா, அந்தப் பழத்தைப் பறித்துத் துண்டு, துண்டாக வெட்டிக் கூட்டத்திலுள்ளோர் புசிப்பதற்காகக் கொடுத்தான். மிகவும் இனிமையான பழம் என்று அதனை வாங்கிப் புசித்த அனைவரும் கூறி மகிழ்ந்தார்கள். ஆனால் மிகவும் வியப்புக்குரிய காரியம் என்னவெனில் அந்த இனிமையான பழத்தை உருவாக்கிப் பிறருக்களித்த அந்த மாயவித்தைக்காரன் தன்னளவில் ஒரு சிறிய துண்டைக்கூட வாயில் வைக்கவில்லை என்பதுதான். அவன் புசித்தால் மந்திரம் செல்லாதாம்.

மற்றவர்களை ஆசீர்வாதங்களுக்குள்ளும் கிறிஸ்துவுக்குள்ளான ஆனந்த சமாதான நிலைகளுக்குள்ளும் வழிநடத்தும் நாம் நமது தனிப்பட்ட வாழ்க்கை நிலைகளில் மிகவும் நெருக்கப்பட்டுப்புடமிடப்படுகின்றோம். மற்றவர்கள் புசித்து மகிழும்படியான தீங்கனிகளை நாம் கிறிஸ்துவுக்குள் உருவாக்கிக் கொடுக்கின்றோம். ஆனால் நாம் நமது தனிமையான ஜீவிதங்களின் கடும்போராட்டங் காரணமாகக் கனிகளை உண்டு மகிழக் கூடாதவர்களாயிருக்கின்றோம்.

தனது ஓய்வுநாள் பிள்ளைகளுக்கு ஆண்டவருடைய தாயடைவான அன்பையும், மானிடவதார நாட்களில் அவர்செய்த அற்புத அடையாளங்களையும், இன்றும் ஜீவிக்கின்ற மெய்தேவனாக அதே காரியங்களைச் செய்துவருவதையும் கூறியபோது கள்ளங்கபடமற்ற ஒரு அன்புள்ள பிள்ளை எழுந்து "டீச்சர், அப்படிப்பட்ட அன்புள்ள ஆண்டவரிடம் நீங்கள் ஏன் உங்களுக்கு ஒரு பேபிக்காகக் கேட்கக் கூடாது? உங்களுக்குப் பல வருஷமாக ஒரு பேபி கூட இல்லையே" என்று அன்பு பொங்கக் கூறினாளாம். அந்தக் குழந்தைக்கு

யாது பதில் அளிப்பது? மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை...” (மத். 27:42) என்று தானே சத்துருக்கள் நமது ஆண்டவரையுங்கூட நிந்தித்தார்கள். அப்படித்தான் நம்முடைய காரியமும் உள்ளது

டோனுவூர் ஏமிகார்மைக்கல் என்ற காருண்ய அம்மாள் அவர்களின் ஊழிய ஆரம்ப நாட்களில் ஆண்டவர் அவர்களுடைய சிறிதும் பெரிதுமான ஒவ்வொரு ஜெபமன்றாட்டுகளுக்கும் உடனுக்குடன் விடைஅளித்து லட்சாதி லட்சம் பணங்களையும், உதவிகளையும் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து அனுப்பியது மட்டுமல்ல இன்னும் எத்தனை, எத்தனையோ நன்மைகளைத் தமது நாம மகிமைக்காகவும், அநேகரின் ஆத்தும மீட்புக்காகவும் அவ்வம்மையாரைக் கொண்டே செய்துவந்தார். ஆனால், திடீரென அவர்களின் கால் ஒடிந்தது. எட்டுவார காலத்திற்குள் சுகமடைந்து முன்போலத் தங்களது குடும்பத்தில் குழந்தைகளுடன் ஓடிஆடி உழைக்க விரும்பிய அம்மையார் இருபது ஆண்டுகள் படுக்கையிலிருக்க அன்பின் தேவன் சித்தங்கொண்டார். அம்மையாரும், டோனுவூர் ஐக்கியத்திலும், மற்றும் உலகமெங்கிலுமுள்ள தேவமக்கள் அநேகர் அவர்களின் நற்சுகத்துக்காக ஏறெடுத்த மன்றாட்டுகள் ஒன்றுமே கேட்கப்படாததுபோலத் தோன்றியது. இறுதிவரை அவர்கள் சுகமடையவே இல்லை. ஒன்றிரண்டு அல்ல, இருபது நீண்ட ஆண்டு காலம் அந்தப்பரிசுத்த அம்மையார் கட்டில் கிடையாகக்கிடந்து அவதியுற்றார்கள்.

ஆனால் அவர்கள் மனோதிடம் குன்றவில்லை. அவர்களின் ஆத்துமா பலவினமடையவில்லை. அவர்களின் முகத்தின் மகிழ்ச்சி குறையவில்லை. அவர்கள் வசித்த அறை தேவனின் அன்பும், வல்லமையும் நிறைந்த நிலையமாயிற்று. அந்த இருபதாண்டுகளும் கர்த்தரின் அன்பை டோனுவூர் ஐக்கியக் கூட்டத்தார் மட்டுமல்ல, உலகமெங்கும் உள்ள ஆயிரக்கணக்கானோர் அனுபவிக்கப் பயன்பட்டன. ஆகையால் அம்மையாரின் வியாதிப்படுக்கை ஆசீர்வாதமாக மாறியது.

அன்பார்ந்த ஆண்டவருடைய பிள்ளையே, நம்முடைய வாழ்க்கையில் நாம் பானம் பண்ணும்படியாக அன்பின் கர்த்தர் நமது கரங்களில் அளித்துள்ள கசப்பான பாத்திரத்தை மிகவும் அன்புடன் பெற்று முறு முறுப்பின்றி அதைப் பானம் பண்ணுவோம். நம்முடைய நித்திய நன்மைக்கு ஏதுவாகவும், தம்முடைய பரலோக பாக்கியங்களுக்கு நம்மைப் பங்காளிகளாக்கவும் அதை அவர் நமக்களித்துள்ளார். உலகம் அதினிமித்தமாக நம்மை எள்ளி நகைக்கலாம், அகங்காரிகளும் பொய்யைப் பிணைக்கிறவர்களும் நம்மீது தீதானவைகளைக் கூறி நம்மை நிந்தித்து இகழலாம். ஒருக்கால் அவை உன் காதுகளால் கேட்க உனக்குக் கடுந்துயர் உண்டாகலாம்.

ஙகாதே. உன் முகத்தைக் கற்பாறையைப் போலாக்கிக்கொள் (ஏசா. 50:7) இன்று நீ பருகும் பாத்திரத்தின் பானம் கடுங்கசப்பா யிருக்கலாம். ஆனால், நாளை அதை உனக்களித்தப் பரலோகக் ஏங்களை அன்பொழுக முத்தமிட்டு ஆனந்திப்பாய்.

அன்பின் கன்மலை உனக்களித்துள்ள அழுத்தும் நுகத்தை உற்றுப்பார். அந்த நுகம் உனக்கு ஏன் பூட்டப்பட்டது? உன்னைத் தமக்கெனத் தெரிந்த பரிசுத்தக் கர்த்தரின் சாயலுக்கொப்பாக உன்னை மாற்றவும், உன்னில் காணப்படும் அனைத்துப் பாவக் கறைகளையும், கீழ்ப்படிய மனமற்ற முரட்டு சுபாவங்களையும் நொறுப்படுத்தி நாளடைவில் உன்னை உத்தமனாக நிலைநிறுத்தவும் அநேக ஆயிரங்களுக்கு உன்னை ஆசீர்வாதமான பாத்திரமாக எடுத்துப் பயன்படுத்தவும் மாத்திரமே.

உன்தோளை உறுத்தும் அந்நுகம் அங்கேயே இருக்கட்டும். அதைச் சுமக்கிறது உனக்கு நல்லது (புல. 3:27) அதை எடுத்துப் போட ஒருக்காலும் வகைபார்க்காதே. நீ நலிந்துபோவாய்.

முட்டையிலிருந்து கோழிக்குஞ்சு ஒன்று வெளிவந்துகொண்டிருந்ததைக் கவனித்தேன். அக்குஞ்சு முட்டையிலிருந்து முழுவதுமாக வெளிவந்து விட்டாலும் ஒரு சிறிய பகுதிமாத்திரம் குஞ்சின் மேல் ஒட்டிக் கொண்டிருந்ததைக் கண்டேன். குஞ்சானது அதிலிருந்து விடுபடப் பெரிதும் முயற்சித்துக் கொண்டிருந்தது. அதின் மேல் எனக்கு இரக்கம் உண்டாயிற்று. முட்டையின் தோடிலிருந்து அது விடுபடச் சிறுவனாக நான் உதவினேன். ஆனால் அந்தக் குஞ்சு சற்றுநேரத்தில் செத்துப்போயிற்று.

சர்வவல்லவருக்கு நம்மை எந்தெந்தப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டுமென்பது நன்றாகத் தெரியும். அவர்விரும்பும் பாதையில் நாம் சென்றால் முடிவில் கனம்பெற்று அவருடன் சதாகாலமும் நித்திய பேரின்பம் அனுபவிப்போம்.

கர்த்தர் நமக்களித்துள்ளதான அந்தக் குறிப்பிட்ட அழுகையின் பள்ளத்தாக்கை நீரூற்றாக்கிக் கொண்டு அதில் நாம் ஆசைத் தீரப் பானம் பண்ணி மகிழ்வதுடன் மற்றவர்களையும் பானம் பண்ணச் செய்து அவர்களின் தாகம் தீர்ப்போம்.

கர்த்தர் கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்.

தேவ எக்காளம்

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஓர் ஆவிக்குரிய மாதாந்திர வெளியீடு. இது எந்த ஒரு சபைப் பிரிவையும் சார்ந்த ஒரு பத்திரிக்கையல்ல. ஆண்டுச் சந்தா ரூ. 7/- மட்டுமே.

அனுப்பவேண்டிய முகவரி:- DEVA EKKALAM,
Kotagiri P. O. - 643 217,
Nilgiris, S. India.

பாவத்தின் பலன் நரகம், நரகம், ஓ பாவி நடுங்கிடாயோ!

(Rev. RANDY RAY)

"பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்துப் பாவத்தைப் பிற பிக்கும், பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்"
(யாக். 1:1

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் நான் பிரசங்கித்து வருகின்றேன். என்னுடைய பிரசங்கங்களில் பல்வேறுபட்டச் செ திகளை நான் பகிர்ந்து கொண்டுவருகின்றேன். சில சமயங்களி மனதிற்கு ஆறுதலை அளிக்கக்கூடிய செய்திகளையும், சில சமய ளில் மோட்சம் அல்லது நரகத்தைக் குறித்த செய்திகளையும், சமயங்களில் கிறிஸ்தவ போதனைகள், கிறிஸ்தவ சவாலைக் குறி செய்திகளையும், மற்ற சில சமயங்களில் முற்றும் சுவிசேஷத் அடிப்படையிலான செய்திகளை மாத்திரமே கொடுத்துவருகின்றேன்

இன்று நான் பாவத்தின் மூன்று கொடிய தன்மைகளை குறித்து மட்டும் பேச ஆசைப்படுகின்றேன்.

நம்முடைய சொந்த பட்டணத்தில் கடந்தவாரம் நிகழ்ந் தொரு அதிர்ச்சி தரக்கூடிய கோர பயங்கர சம்பவத்தைக் குறித் செய்தியை நம்மில் அநேகர் செய்தித் தாட்களில் வாசித்தறிந்தோம் மேற்கு நெடுஞ்சாலையிலுள்ள கட்டிடத்தின் அறையொன்றில் !வ தினளான பெண்ணொருத்தி 31 வயதினனான மனிதன் ஒருவனு டையில் நிர்வாணக்கோலத்தில் சுட்டுக்கொல்லப்பட்டு இருவரு இரத்தவெள்ளத்தில் மிதந்துகிடந்ததை நாம் வாசித்தோம். அந் துயரச்செய்தியானது நம்மில் பெரும்பாலோரை ஒரேவிதமாகப்பாதி த்து. நம்முடைய தேவாலய கோபுர நிழலின் கீழேயே இத்தகை தோர் குரூரக்கொலை ஆபாசமான சூழ்நிலைகளின் பின்னணியிற் நடந்ததைக்குறித்து நாம் மட்டற்ற கிலேசமுற்றோம். ஒரு இளவய னளான பெண் தன்னைவிட அதிகமூப்புள்ள ஒருமனிதனுடன் கட்ட அறையொன்றில் இரவுநேரம் உல்லாசக்கேளிக்கைகளில் ஈடுபட்டி ருந்தவேளை கொலைபாதகன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டா

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கோடை காலத்தி போது நான் ஃப்ளாரிடாவிலுள்ள ஆர்லன்டோ என்றவிடத்தி என் உறவினர்கள் சிலருடன் தங்கியிருந்தேன். எனது உறவின களுக்குச் சிநேகிதியான ஒரு ஸ்திரீயை அங்கு நான் சந்தித்தே அவர்களுக்கு இரண்டு அருமையான பெண் மக்கள் இருந்த ஒரு மகள் அப்பொழுது 10 வயதினளாகவும், பிரகாசமான கண்க புடைய யார்சியா என்ற மற்றொரு மகள் 6 வயதினளாகவுமிருந்

சில தினங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டு நிர்வாண இரத்த வெள்ளத்தில் கிடந்ததாக நான் முதலில் குறிப்பிட்ட இந்த மார்சியா என்பவள்தான்.

நான் ஆறு வயதினளாக அவளைக் கண்டபோது அவள் ஒரு சந்தோஷமுடைய சிறுமியாகக் காணப்பட்டாள். பாவத்தின் கொடூரான விளைவுகளின் காரணமாக இத்தகையதோர் மா பயங்கர மரணம் அவளைச் சந்திக்குமென்பதனையும் அதைக் குறித்த அருவருப்பான செய்திகளைத் தாங்கிய செய்தித்தாட்களை நான் எனது கரத்தில் எடுத்து ஒரு நாள் படிப்பேன் என்பதையும் நான் எனது கற்பனத்தில் கூடச் சிந்தித்திருக்கமாட்டேன். அதைப்பற்றிய ஒரு சிறிய நினைவுகூட என் உள்ளத்தைத் தொட்டுச் செல்லவில்லை. இத்தவிதமானதோர் காரியம் அவளுக்கு நிகழப்போகின்றது என்பதனையும், அவள் நற்பெயர் எல்லாருக்கு முன்பாகவும் நாற்றமடையப்போகிறது என்பதையும் குறித்து அப்பொழுது நான் ஒரு யோசனைகூட என் மனதில் சிந்தித்ததில்லை. அப்படியே நீங்களும் கூட உங்கள் அருமைப் பிள்ளைகளைக் குறித்துக் கட்டாயம் எதுவுமே நினைக்கமாட்டீர்கள்.

ஒரு இளம் பெண்ணுக்கு இந்தப் பரிதாபகரமான முடிவு ஏன் நிகழ்ந்தது? ஆம். இதுவேதான் பாவத்தின் கொடியதன்மை யாகும். மார்சியா உங்கள் சிறிய பெண்ணைப்போன்ற ஒருவளே. ஒரு காலத்தில் அவள் தனது தாய்க்கு ஒருஆசை மகளாகவும் தந்தைக்கு அவர் கண்ணின் கருவிழியாகவும் திகழ்ந்தாள். ஆனால் அதேசமயம் பிசாசானவனின் கண்ணிக்கு இலக்காகவுமிருந்தாள். பாவம் எத்தனை தூரம் சென்று ஒரு வாழ்க்கையைப் பாழாக்கி நாசமாக்கும் என்பதை மார்சியாவின் துயர சரிதம் இரத்தினச் சுருக்கமாகச் சொல்லுவதாயிருக்கின்றது.

பாவத்தின் மூன்று குரூரத் தன்மைகளைக் குறித்து நான் சொல்லப்போகின்றேன்.

1. நீ செல்லவேண்டுமென்றிருந்த எல்லைக் கோட்டிற்கு வெகு அப்பாலும் பாவம் உன்னை வலுக் கட்டாயமாக இழுத்துச்செல்லும்:

பாவப் பாதையில் நீ செல்லத் திட்டமிட்டு ஆசைப்பட்ட குறிப்பிட்ட தூரத்திற்கு வெகு தொலைவுக்கும் பாவம் உன்னை [illegible]த்தப்போட பலவந்தமாக இழுத்துச் செல்லும். ஆதியாகமம் 34-ம் அதிகாரத்தில் யாக்கோபு என்றதோர் தேவ மனிதனைக் குறித்து நாம் வாசிக்கின்றோம். யாக்கோபுக்கு அநேகம் பிள்ளைகளிருந்தனர். அவர்களில் தீனாளும் ஒருத்தியாவாள். தேவ பக்தியும், இனிய நற்சுபாவமும் நிரம்பியிருக்க வேண்டியதான தீனாள் என்ற பெண் அதற்குப் பதிலாக பக்தியுள்ள கிறிஸ்தவக் குடும்ப வாழ்க்கையை விரும்பாத ஒரு பெண்ணாகவிருந்தாள்.

பக்தியுள்ள தந்தையின் வீட்டில் நடந்த குடும்ப ஜெபங்களை அவள் விரும்பியிருக்கமாட்டாள் என்று நான் விசுவாசிக்கின்றேன். குடும்ப ஜெபத்திற்கு யாக்கோபு தன் பிள்ளைகளை அழைக்கையில் தீனாளுக்கு அந்த நேரமானது தனது தந்தை தன்னைத் தொந்தரவு படுத்துகிறதான வேளையாக அவள் எண்ணியிருக்கக்கூடும். முறை முறையாக தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கையில் தீனாள் அந்த வேளையை ஏதாவதொரு சாக்குப்போக்கைக்கூறிக் கடத்திவிட்டிருக்கலாம். எழுப்புதல் கூட்டங்கள், ஜெப ஐக்கியக் கூட்டங்கள் எல்லாம் அவளுக்கு மதியீனமான காரியங்களாகத் தெரிந்திருக்கும். ஆவிக்குரிய காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதை அவள் சற்றும் விரும்பியிருக்கமாட்டாள்.

யாக்கோபின் மகளான தீனாள் வேறு பிரிக்கப்பட்ட பரிசுத்த வாழ்க்கையைப் பைத்தியம் என்று எண்ணியிருக்கலாம். தனது பக்தியுள்ள தந்தை பண்டைகால கர்நாடகமான பத்தாம் பசலியாகவும், தாயார் ஒரு பாசாங்குக்காரியாகவும் அவள் பார்வைக்குத் தோற்றமளித்திருப்பார்கள். "நான் எப்படி வாழ விரும்புகின்றேனோ அப்படித்தானே நான் வாழுவேன்" என்று அவள் தனக்குள் கூறியிருப்பாள்.

தீனாளுடைய காரியம் உங்களில் சிலருடைய காரியத்திற்கு இசைந்ததாகவிருக்கவில்லையா? நாம் அனைவரும் கூட ஒரு சமயத்தில் அல்லது மற்றொரு சமயத்தில் தீனாளுடைய மன நிலையைத் தான் கொண்டிருந்தோம். நமது மனதும், மாமிசமும் விரும்புகின்ற வழிகளில் இனி நாம் நடக்கவியலாது என்று உணர்ந்து கொள்ளும் இவ்வேளையில் அந்தப் பழைய காலத்து நினைவுகள் எத்தனை விந்தையாயிருக்கின்றன.

தந்தை, தாயார் யாது கூறுகின்றார்களோ அதின்படிச் செய்யத் தீனாள் மனதற்றதோர் மகளாகவிருந்தாள். உலகத்துடன் சற்று ஒட்டிக்கொள்ள அவள் ஆசைப்பட்டாள். அந்தச் சிறிய இணைப்பு அவளை எவ்வளவு தூரம் உலகத்தினுக்குள் கொண்டு செல்லும், என்பதைப் பாவம், அப்பொழுது அவள் அறியாதிருந்தாள். உலகத்தினுள் நான் சென்று அதினுடைய கல்வியிலும்கூட கொஞ்சம் கற்றுக்கொண்டுவருவேன் என்று எண்ணிக்கொண்டு அவள் தேசத்துப் பெண்களைப் பார்த்துவரச் சென்றாள். அவள் குறிப்பாக இதை மாத்திரம்தான் செய்தாள். எழுச்சி தரும் பாங்குடைய உலக உல்லாசத்தில் கொஞ்சம் மாத்திரம் கண்டுவரவே அவள் சென்றாள். ஆனால் பாவத்தின் முதலாவது குரூரத் தன்மையானது அவளைக் கொஞ்ச உலக இன்பத்துடன் மாத்திரம் விட்டுவிடவில்லை. பாவம் சுயநலவாதியானதோர் சத்துருவாகும். சற்றுநேர மனமகிழ்ச்சிக்காக உலகத்தை நாடிச்சென்ற தீனாள் தன்னுடைய கவலையீனமான வாழ்வின் நிமித்தமாகத் தனது ஜீவகால முழுமைக்குமாக

அவமானத்தைத் தன் மடியிலே அளந்து வாங்கிக் கொண்டுவந்
தாள். தேவனுடைய வார்த்தைகளில் தேவபக்தியுள்ளதோர் மனி
தனின் நீதியும், கற்புமுள்ளதோர் நற்குண நங்கையாகத் தீனாளைக்
காண வேண்டிய நாம் அதற்கு எதிரிடையாகத் தேவபக்தன் ஒரு
வனின் இளவயதினளான ஒரு மகள் உலகத்து வாலிபன் ஒருவனால்
தன்னை விபச்சாரத்தால் கறைப்படுத்தித் தன்னையே அழித்துக்
கொண்டாள் என்று நாம் துக்கத்துடன் காண்கின்றோம்.

மெய்தான், பாவமானது நீ செல்ல விரும்பிய எல்லைக்கும்
அதி அப்பால் உன்னைக் கெடுபாதாளப் பாவக்குழிக்குள் கொண்டு
சென்று உன்னை அழிக்கும். பொருளாசைப் பற்றுடன் சோதோ
முக்கு நேராகத் தன் கூடாரத்தைப் போட்ட லோத்து தனது பெண்
களை ஓரினப்பாலுறவு (HOMO SEXUALS) வெறியரான சோதோ
மியர்களுக்குக் கையளிக்க வேண்டியதிருக்கும் என்பதை ஆரம்பத்
தில் அறியாதிருந்திருப்பான் என்று நான் எண்ணுகின்றேன். நிச்
சயமாகவே அவன் கனவிலும்கூட அதனை நினைத்துப் பார்த்திருக்க
மாட்டான்.

“சற்று நேரம்தான் நான் அதில் ஈடுபட்டேன். கொஞ்ச சம
யம்தான் நான் அதில் பங்கெடுத்தேன்” என்று மக்கள் சொல்லு
வதை நாம் கேட்டிருக்கின்றோம். பாவத்தைப் பொறுத்தமட்டில்
“சற்றுநேரம்” “கொஞ்ச சமயம்” எல்லாம் கிடையாது. நீ
விரும்புகிற எல்லைக் கோட்டுக்கு மிகவும் அப்பால் பாவம் உன்னைப்
பலவந்தமாகக் கொண்டு செல்லும்.

உயர்நிலைப் பள்ளியில் நான் படித்துக்கொண்டிருக்கையில்
மிகவும் துடிப்பான ஒரு நண்பனை எனக்குத் தெரியும். லேரி என்ற
அந்தக் களிப்பும் குதூகலமுமான நண்பன் “கொஞ்சம் மாத்திரம்”
போதை தரும் மாத்திரைகளைத் தன்னளவில் முதலில் ருசித்துப்
பரிசோதிக்க ஆசை கொண்டான். அவன் ஆரம்பத்தில் Marijuana
என்ற போதை மருந்தை ருசிபார்த்துக் காலப்போக்கில் போதை
மருந்துகளிலேயே மகா கொடிய L S D என்ற அமிலக் கலப்புள்ள
மாத்திரை வரை பயன்படுத்துபவனாக மாற்றமடைந்தான். இவ்வித
மான கொடிய போதை வஸ்துக்களைப் பின்னொரு நாளில் நான்
பயன்படுத்தப்போகின்றேனே என்பதை அவன் ஆரம்பத்தில் சற்
றும்கூடச் சிந்தித்திருக்கமாட்டான்.

போதை மருந்துகளின் பின் விளைவுகள் காரணமாக அவன்
ஓர் மனநிலை மருத்துவ ஆஸ்பத்திரிக்குக்கூட வேளா வேளைகளில்
செல்லவேண்டியதானது. போதை மருந்து வாழ்வுக்கு லேரி ஒரு
அடிமையும், பலியாளுமானான். தனது நிலை இத்தனை கேடாய்
முடிவடையும் என்று அவன் தனது முதல் போதை மருந்தை உட்
கொள்ளும்போது கொஞ்சம்கூட நினைத்துப் பார்த்திருக்கமாட்டான்.
இந்தக் கொடிய போதை மருந்துப் பழக்கத்தின் எதிரொலியாக

...மைதான், நீ செல்ல வேண்டுமென்றிருந்த எல்லைக் கோட்டுக்கு அப்பாலும் பாவம் உன்னை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு செல்லும்.

2. நீ தாமதிக்க விரும்பும் நேரத்திற்கும் அதிகமாகப் பாவம் உன்னைத் தன்னில் நிலைத்திருக்கச் செய்யும்.

"விபச்சார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்...." என்று பேதுரு 2-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் கூறப்பட்டிருக்கும் செய்தியின் தார்ப்பரியம் யாது? பாவமானது நீ விரும்பும் அளவுக்கும் அதிகமான நேரம் உன்னைத் தன்னில் ஆழ்த்தி வைத்துப்போடும் என்பதே. உன்னில் ஏதாவது பாவப் பழக்கம் நிலை கொண்டிருந்து நீ அதனை மிகச் சுலபமாக, நீ நினைக்கும் வேளையில் விட்டுவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றாயோ? உனக்கு நான் சொல்லக்கூடிய செய்தி உண்டு. நீ நினைக்கிற அளவுக்குப் பாவப் பழக்கத்தை இலகுவில் விட்டுவிடச் சாத்தான் உன்னை ஒருக்காலும் அனுமதிக்கவேமாட்டான். நீ தாமதிக்க விரும்பும் நேரத்திற்கும் அதிகமாகப் பாவம் உன்னைத் தன்னில் நிலை கொண்டிருக்கச் செய்யும்.

தான் இருமல் எடுக்கும்போது இரத்தத்தையே துப்பிக்கொண்டிருக்கும் ஒரு குடிகாரன் மீண்டும் குடிக்க நாட்டம் கொள்ளுவதன் காரணம் யாது? இரத்தத்தைத் துப்ப ஆரம்பித்ததும் உடனே, தான் கொண்டிருக்கும் குடிப்பழக்கத்தை எந்த ஒரு மதிகேடனும் விட்டுவிட முயற்சிப்பான். அவனது சரீரம் உடைந்து நொறுங்கிப் போயிற்று வயிறு வீங்கி கன்னங்கள் குழிந்துபோய்விட்டன. இருப்பினும் அந்தக் குடிகாரன் தொடர்ந்து குடித்துக் கொண்டேயிருக்கின்றான். காரணம்? பாவம் அவனைத் தன்னில் அவன் விருப்பத்திற்கு மாறாக அதிகமான நேரம் இன்னும் நிலைத்திருக்கப் பண்ணி வைத்திருப்பதேதான்.

ஒற்றை நுரையீரல் பிளவை நோயால் தாக்குண்ட மனிதன் ஒற்றை நுரையீரலுடன் ஆஸ்பத்திரியில் படுத்திருப்பினும் மீண்டும் சிகரெட்டைப் புகைப்பதற்கு ஆசை கொண்டு தீக்குச்சியைப் பற்றவைப்பதன் காரணம் யாது? தொடர்ந்து அவன் ஏன் புகைக்கத் தாகம் கொள்ளுகின்றான்? அவன் விரும்பும் கால அளவிற்கும் அதிகமாகப் பாவம் அவனைத் தன்னில் பிடித்து வைத்திருப்பதே அதின் இரகசியம்.

போதை மருந்துகளுக்கு அடிமையானோன் தனது சரீரம் முழுமையும் அம்மருந்துகளால் உருவழிந்து போனபோதிலும் இன்னும் அம்மருந்துகளைப் பயன்படுத்துவதன் காரியம் யாது? பாவம் அவ

னைத் தன்னில் அவன் விருப்பத்திற்கு மாருகக் கட்டி வைத்திருப்பதுதான்.

LOFTIS என்றதோர் நண்பனை எனக்குத் தெரியும். நாளொன்றுக்கு 800 ரூபாய்க்கு அவன் அபினி என்ற போதை வஸ்துவை அருந்துவான். தன்னுடைய சரீரம் போதை மருந்துகளால் அழிந்தே போய்விட்டது என்று என்னிடம் கூறுவான். "நீ ஏன் அதை அப்படியே விட்டுவிடக்கூடாது?" என்று நான் அவனைக் கேட்டால் "நான் ஏன் அப்பழக்கத்தை விட்டுவிட முடியவில்லை" என்று எனக்கே தெரியவில்லை என்று அவன் என்னிடம் கூறுவான்.

ஏன் விட்டுவிட முடியவில்லை என்று எனக்குத் தெரியும். பாவம் அவனைத் தன்னில் நீடித்து நிலைக்கொண்டிருக்கச் செய்திருப்பது தான். உனது வாழ்க்கையில் எந்த ஒரு பாவமாக இருப்பினும் காரியமில்லை, அந்தப் பாவம் உன்னைப் பின் கட்டாகக்கட்டி நீ விரும்பும் காலத்திற்கும் அதிகமாக உன்னைத் தன்னில் சிக்கவைத்துக்கொண்டிருக்கும்.

நானும், எனது சகோதரனும் டெனன்ஸி என்ற பட்டணத்திற்குச் சென்றிருந்தோம். அங்கே மிகவும் ஐசுவரியமுள்ள ஒரு கிறிஸ்தவ நண்பனைச் சந்தித்தோம். அவருக்கு நல்ல வருவாய் தரக்கூடிய அநேக வியாபாரங்கள் நடந்துகொண்டிருந்தன. அவருக்கு ஒரு பாங்கியும் இருந்தது. ஒருநாள் அவர் கண்ணீருடன் எங்களண்டைவந்து தனது பாங்கியின் பொறுப்பாளனுக 20 ஆண்டுகாலம் பணிபுரிந்துவரும் நம்பகமான மனிதன் ஒருவன் பாங்கியின் பெருந் தொகையான பணத்தைக் கையாடல் செய்தது தெரியவந்துள்ளது என்று கூறினுர். பல்லாயிரக்கணக்கான டாலர்களை அவன் களவாடியிருப்பதால் அவற்றை அவனுல் திரும்பவும் செலுத்தவும் கூடாது என்றும் கூறினுர். "எப்படி அவன் அதைச் செய்தான்? ஏன் செய்தான்?" என்று நான் அவரிடம் கேட்டேன்.

எனது நண்பர் மாறுத்தரமாக நான் அந்த மனிதனண்டை நேரிடையாகச் சென்றிருந்தேன். நான் பாங்கிற்குச் சென்றதும் அழுகைதான் எனக்கு வந்தது. நான் அழுவதைக் கண்டதும் பாங்கிலுள்ள ஏனையோரும் அழுதனர். நான் அந்த மனிதனிடம் "நீ ஏன் இந்தக் காரியத்தைச் செய்தாய்?" என்று கேட்டேன். அவன் மாறுத்தரமாக "சில ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கு மிகவும் அவசியமாகப் பணம் தேவைப்பட்டது. எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பாங்கியிலுள்ள பணத்தின் ஞாபகம் வரவே சுலபமாக இங்கிருந்து எடுத்துக் காரியத்தை முடித்துக் கொண்டேன். அதிலிருந்து மீண்டும், மீண்டும் பணம் தேவைப்படும் பொழுதெல்லாம் இங்கிருந்தே எடுத்துச் செலவழித்துக் கொண்டிருந்தேன். இத்தீயடழக்கத்தை விட்டுவிட நான் எவ்வளவோ முயன்றும் என்னுல் கூடாதுபோயிற்று" என்று கூறினுன்.

அதற்கான விடை இதுதான். பாவமானது அவன் விரும்பிய கால அளவிற்கும் கூடுதலாக மிக நீண்ட நேரம் அவனைச் சிறைப் பிடித்துக் கொண்டது. மறந்துவிடாதே. தேவனுக்குப் பிரியமற்ற காரியங்களை நீ திட்டமிட்டுச் செயல்படும் வேளைகளில் இன்னும் நீண்ட நேரம் பாவம் உன்னைப் பலவந்தம் பண்ணிச் செயல்பட வைக்கும்.

தான் செய்த விபச்சார பாவத்தை மூடி மறைப்பதற்காகத் தாவீது ராஜா ஏன் கொலை செய்தார்? காரணம், பாவமே! அவர் தாமதிக்க விரும்பிய நேரத்திற்கும் அதிகமாகப் பாவம் அவரைத் தாமதிக்கப் பண்ண உறுதி கொண்டிருந்ததுதான்.

தான் வாசம் பண்ணும் இடம் மகா அருவருப்புகள் நிறைந்த பாவப் படுகுழி என்று கண்டதும் லோத்துவினால் ஏன் சோதோமை விட்டு வெளியேற மனதில்லாமற்போயிற்று? காரணம், பாவமானது அவன் தாமதிக்க ஆசைப்பட்ட நேரத்திற்கும் அதிகமாக அவனைத் தாமதிக்கப் பண்ண உறுதி கொண்டிருந்ததுதான்.

சத்துருக்களின் நெருப்பண்டை உட்கார்ந்து குளிர் காய்ந்து கொண்டே தனது நாவினால் தன் அருமை ஆண்டவரை மும்முறை மறுதலித்துச் சத்தியம் பண்ணிய பேதுருவுக்கு ஏன் நெருப்பை விட்டு வெளியேற மனமில்லாமல் போயிற்று? காரணம், பாவம் அவன் தாமதிக்க விரும்பிய குறிப்பிட்ட கால அளவிற்கும் கூடுதலாக அவனைத் தாமதிக்க உறுதி கொண்டிருந்ததுதான்.

முதலில் குறிப்பிட்ட எனது நண்பன் லேரி போதை மருந்தை ஒரு தடவை ருசிபார்த்ததும் ஏன் அதை விட்டுவிடக் கூடாமற் போயிற்று? அதின் தார்ப்பரியம் அவன் தாமதிக்க விரும்பிய நேரத்திற்கும் அதிகமாகப் பாவம் அவனைத் தன்னில் ஆழமாய் அமிழ்த்திப்போடத் திட்டமிட்டிருந்ததுதான்.

முதலில் நான் குறிப்பிட்ட மார்சியா என்ற பெண் அந்த மனிதனோடு ஏன் துன்மார்க்கமாய் ஜீவித்துக் கோரமாய்க் கொலையுண்டு மாளவேண்டும்? ஒரு காலத்தில் அவளை அவள் தாயார் ஒரு கிறிஸ்தவப் பெண்கள் விடுதிக்கு அனுப்பியிருந்தார்களே, அந்த நாட்களில் ஆண்டவருக்குத் தன்னை ஒப்புவித்துவிட்டதாகப் பெற்றோருக்குக் கடிதம் எழுதியிருந்த மார்சியாவுக்கா இந்த அவல முடிவு! காரணம், பாவமானது அவள் விருப்பத்திற்கு விரோதமாக நீண்ட காலம் அவளைப் பாவத்தில் தரித்திருக்கப் பண்ணியதுதான்.

பாவத்தின் மகா கொடிய குரூரத் தன்மை இதுவேதான். அது நீ விரும்பும் எல்கைக்கு வெகு அப்பால் உன்னை அழைத்துச் செல்லும்.

அது நீ தாமதிக்க விரும்பும் கால அளவிற்கும் மிக நீண்ட நேரம் உனது ஆசைக்கு நேர் விரோதமாகப் பாவப் படுகுழியில் உன்னை ஆழ்த்தி அமுக்கி வைத்துக்கொண்டிருக்கும்.

3. பாவத்திற்கு நீ செலுத்தக்கூடிய விலைக் கிரயமானது நீ நினைப்பதற்கும் மிகக் கூடுதலானதோர் தொகையாகும்.

"பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும்; பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக். 1:15)

"பாவத்தின் சம்பளம் மரணம்......." (ரோம. 6:23)

என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும், அப்சலோமே; என் மகனே, என் மகனே என்று அங்கலாய்த்துச் சத்தமிட்டு அழுது கொண்டே கெவுனி வாசலின் மேல் வீட்டிற்குள் தாவீது ராஜா ஏறிச் செல்லுவதை இப்பொழுதும் என் காதுகளால் கேட்க முடிகின்றது.

பாவத்திற்கு நான் செலுத்த விரும்பிய விலைக்கிரயமானது எனது உத்தேசத்திற்கும் மிக, மிக அதிகமாயிற்றே என்பதுதான் தாவீது ராஜாவின் கதறுதல்.

மார்சியாவின் சரிதம் ஒரு உண்மைச் சம்பவமாகும். அதின் முடிவு நம்மை அதிர்ச்சியடையப் பண்ணுகின்றது. பாவம் அவளுடைய வாழ்வில் இறுதியாக எப்படி செயலாற்றியது என்பதனைக் குறித்த விவரணத்தை நான் உங்களுக்குக் கூற ஆசைப்படுகின்றேன். துப்பாக்கிக் குண்டு 16 வயதினளான அந்த இளம் மங்கையை எதிர்நோக்கி வருகையில் அவள் தனது கரங்களால் அவமானம் நிறைந்த தனது பாவ வாழ்க்கையை மறைப்பதுபோல் தன் முகத்தை மூடி மறைத்தாள். குண்டு அவளது பின் கைப்பக்கமாகத் துளைத்துக் கொண்டுவந்து முகத்தில் பாய்ந்து மண்டையோட்டைத் தூக்கி வீசிவிட்டது. மார்சியா இரத்த வெள்ளத்தில் மிதந்தாள். நீ நினைப்பதற்கும் மேலாகப் பாவத்திற்கு நீ விலைக்கிரயம் செலுத்தியாக வேண்டும்.

அமிலத்தை உடலில் தடவி நெருப்பிட்டுக்கொண்டு ஒருநாள் ஒரு வயல்வெளியில் துடிதுடித்து வெந்து மாண்டுபோவோம் என்பதனை என் நண்பன் ஆரம்பத்தில் அறிந்திருப்பானானால் போதை தரும் மருந்தண்டை கட்டாயம் சென்றிருக்கவே மாட்டான் என்று நான் திட்டமாக நம்புகின்றேன்.

தனது துடிப்பான யௌவனப் பருவமாகிய 19-ம் வயதினிலேயே ஒரு மோட்டார் விபத்தில் சிக்கி உயிரிழக்கப் பாவமானது

பின் நாட்களில் வகைசெய்யும் என்பதைத் தெரஸா முதலிலேயே உணர்ந்திருப்பாளானால் மதுபானம் நிறைந்த சிறிய கோப்பை மது வைப் பானம்பண்ணத் தனக்குக் கிடைத்த முதல் தருணத்தைக் காலால் உதைத்துப் புறம்பாக்கியிருப்பாள் என்று நான் நினைக்கின்றேன்.

அருவருப்பான பாவத்திற்குத் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளு முன்னர் அப்பாவமானது எப்பேர்ப்பட்டதோர் விலைக்கிரயத்தைத் தங்களிடம் ஓர்நாள் கேட்கும் என்பதை முதலில் குறிப்பிட்டோர் ஆரம்பத்திலேயே கணக்குப் பார்த்திருப்பார்களானால் அம்மக்கள் எல்லாரும் காலத்திற்குமுன் சாகாமல் இன்று உலகில் உயிரோடிருந்திருப்பார்கள். ஆனால், பாவம், இன்று அவர்களை எரிநரகிற்கு இழுத்துச் சென்றுவிட்டது.

என் சிநேகிதர்களே, நீங்கள் போகவிரும்பிய எல்லைக்கோட்டிற்கு வெகுதொலைவுக்குப் பாவம் உங்களைக் கொண்டுசெல்லும். நீங்கள் தாமதிக்க விரும்பிய காலஅளவுக்கும் மிக அதிகமானகாலம் பாவம் உங்களைத் தன்னில் நிலைகொண்டிருக்கச்செய்யும். பாவத்திற்கு நீங்கள் செலுத்தவேண்டிய விலைக்கிரயமானது நீங்கள் நினைப்பதற்கும் மேலானதோர் பெருந்தொகையாகும்.

இங்கிருக்கின்ற உங்களில் யாரோ ஒருவரை, அவர்யாரென்று எனக்குத் தெரியாவிடினும், பாவமானது அவரை அவர் விருப்பத்திற்கும் முற்றும் மாறாக பாவச்சேற்றுக்குள் நீண்ட தொலைவிற்குக் கொண்டு சென்றிருக்கின்றது. அந்தப் பாவம் என்னவென்று எனக்குத் தெரியாவிடினும் அது அவரை வெகு ஆழப் படுகுழிக்குள் இழுத்துக் கொண்டுபோயிருக்கின்றது. இவ்விதமாகக் கெடு பாதாளத்தினுக்குள் அந்தப் பாவம் அவரைக் கொண்டு செல்லும் என்பதை ஒரு காலத்தில் அவர் கற்பனைகூடச் செய்து பார்த்திருக்க மாட்டார்.

இன்று இங்கிருக்கின்ற உங்களில் யாரோ ஒருவரைப் பாவமானது அவரது ஆசைக்கும், விருப்பத்திற்கும் முற்றும் எதிரிடையாக நீண்ட காலம் தன்னில் சிறைப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கின்றது. பாவ ஆசையின்பத்தை ஒரு குறிப்பிட்ட காலம் வரை மாத்திரமே அனுபவிக்க வேண்டுமென்பது அவரின் இதயப் பூர்வமான எண்ணமாயிருந்தது. பாவ இன்ப சுகத்தை ஒரு குறிப்பான காலம் வரை மாத்திரம் நுகர்ந்து அனுபவித்துவிட்டுப் பின்னர் அதிலிருந்து நழுவிச் சென்றுவிடலாம் என்பதே அவரின் ஆசையாயிருந்தது. ஆனால், அந்தோ! பாவமானது அந்த மனிதனைச் சற்றும் நழுவிச் சென்றுவிடாதபடித் தனது மாயவலையில் செம்மையாகச் சிக்கவைத்துக் கொண்டிருக்கின்றது.

இறுதியாக இங்கிருக்கின்ற உங்களில் யாரோ ஒருவர் தனது கடந்த கால பாவ வாழ்க்கைக் கணக்கைப் புரட்டிப் பார்க்கின்றார். எத்தனை துயரமான காரியம்! அவருடைய கனவிலும்கூட நினைக்க வியலாத அளவுக்கு அவர் தன்னுடைய பாவத்திற்கான விலைக்கிரயத்தை செலுத்தி வந்திருக்கின்றார்.

என் அன்பான சிநேகிதர்களே, இன்றே இயேசுவண்டை வாருங்கள். பாவத்தின் மிக உறுதியான வலிமை மிக்கப் பிடியிலிருந்து உங்களை விடுவிக்க அவர் உங்களுக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கின்றார். இதுவே அனுக்கிரக காலம். இன்றே இரட்சிப்பின் நாள்.

தேவனின் மகிமையின் சுவிசேஷத்திற்குத் தன் வாசல்களை அடைத்துக் கொண்ட நாட்டில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்.



கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமத்திற்கே துதியும், கனமும், மகிமையும் உண்டாகட்டும்.

அருமை நேசர் இயேசுவைத் தங்கள் அன்றாடக வாழ்க்கையிலே சதா ருசித்துப் புசித்த தேவ மக்கள் எந்நிலையிலும் அவருடைய பரிசுத்த அன்பிலிருந்து வழிவிலகிச் செல்லவேமாட்டார்கள். பூமி அதிர்ந்து, ஆழி பொங்கி, கொடுஞ்சூறைக் காற்று அம்மக்களின் ஜீவிதப் படகை மோதித் தாக்கினாலும், அதினிமித்தமாக ஜீவனே அவர்களுக்குக் கசப்பாகிக் கண்ணீரே நாள் முழுவதும் அவர்களின் பானமானாலும் கிறிஸ்துவின் அன்பிலிருந்து அவர்களை யாரும், எதுவும் பிரிக்கவே இயலாது (ரோமர் 8:36-39) ஆனபடியால்தானே, கர்த்தருடைய தாசனாகிய யோபு "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15) என்றும், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற பரிசுத்தர்கள் "தாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களை விடு

விக்காமற்போனாலும் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளுவதுமில்லை......” (தானி. 3:18) என்றும் சவால் விட்டுக் கூறத் தூண்டியது. அந்த எல்லையற்ற மாட்சிமையின் தேவ அன்புதான் வீட்டையும், சொந்த தேசத்தையும், உயிருக்குயிரான அன்பானவர்களையும் நான் துறந்து சுவிசேஷத்தினுக்குக் கடும் தடை விதித்ததோர் நாட்டிற்குள் எனது உயிரையும் துச்சமாக மதித்துத் துணிந்து சென்று தேவ ஊழியம் செய்ய என்னைத் தூண்டி அந்த நாட்டிற்குள் துரத்திவிட்டிருந்தது.

மாலை மயங்கும் நேரத்தில் நான் பாக்லுங் என்றதோர் நேப்பாளப்பேரூர் ஒன்றை நெருங்கிக் கொண்டிருந்தேன். மலைகளிலே புல் அறுத்துத் தங்கள் தோட்களின் மேலுள்ள கூடைகளில் போட்டுக் கொண்டு ஆடு மாடுகளைத் தங்களுக்குமுன்னர் ஓட்டிக்கொண்டு மிகச் செங்குத்தான மலைமுகட்டிலுள்ள பாக்லுங்கை நோக்கி நேப்பாளக் குடியானவர்களும், பெண்களும் சென்றுகொண்டிருந்தனர். வளைந்து, வளைந்துசெல்லும் அந்த ஒற்றையடிப் பாதையில் தலையில் சிகப்பு மூட்டையுடன், தோளில் பையுடன் நான் நடந்துசென்றுகொண்டிருந்ததை அவர்கள் வியப்புடன் உற்றுநோக்கிச் சென்றனர். அம்மக்கள் தங்கள் வீடுகளுக்கு ஆவலுடன் துரிதமாகக்கடந்து செல்லுகின்றனர். ஆனால், பரதேசியாகிய நான் முன்பின் அறியாத ஒரு அந்நிய நாட்டின் கிராமத்திற்குள் எங்கே ராத்தங்க இடம்தேடுவது, அக்கிராமத்தின் மக்கள் எப்படிப்பட்டவர்களோ, சத்துரு நமக்கு முன்னர் என்ன, என்ன இடையூறுகளைக் கொண்டுவந்து வைத்திருப்பானோ என்பதுபோன்ற பற்பல விதமான போராட்ட கேள்விகளுடன் அடிக்கடி வானத்தை அண்ணாந்துபார்த்துக் கர்த்தாவின் ஒத்தாசைக்காகமன்றாடினவனாகச்சென்றுகொண்டிருந்தேன் என்னை முற்றும் ஆண்டவரின் காயப்பட்ட கரங்களிலேயே ஒப்புவித்துவிட்டேன். வளைந்து, வளைந்து மிகுந்த கவனத்துடன் ஏறி இறுதியாக மலைமுகட்டை வந்தடைந்தேன். நான்வந்த பாதையைத் திரும்பிப்பார்த்தபோது என் தலை சுற்றிற்று. நானல்ல, என் அருமைக் கண்மணியாகிய இயேசுவே என்னைத் தமது தோளில் சுமந்து கொண்டு வந்திருக்கின்றார் என்பதறிந்து அவரைத் துதித்தேன்.

பின்னர் சமதரை வழியாக நடந்து பெரிய மரங்கள் சூழ்ந்த பாக்லுங் கிராம எல்லைப் புறத்தை வந்தடைந்தேன். கர்த்தரின் கரத்தின் கிரியைகள் என்னைப் பரவசத்தில் ஆழ்த்தினது. சந்தடியில்லாத, ஆள் அரவமற்ற நிலையில் ஒரு பெரிய மலையின் அரவணைப்பில் அப்பெருங்கிராமம் அமைந்து கிடந்தது. ஊரின் முகப்பில் ஒரு காவல் நிலையத்திற்கு முன்னர் நிறைய நேப்பாள போலீசார் நின்றுகொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் ஒருகணம் ஸ்தம்பித்து நின்றேன். ஏதாகிலும் நம்மைக் கூப்பிட்டு விசாரித்து மூட்டையை

சோதனைபோட்டால் நாம் சரியாக அவர்கள் கையில் சிக்கிக்கொள்ளுவோம் என்றெண்ணி அவர்கள் அனைவரும் கடந்து செல்லும்வரை ஓரிடத்தில் நான் மறைவாக இருந்து கொண்டு அவர்கள் அனைவரும் போன பின்னர் துரிதமாக அந்த எல்லையைத் தாண்டி ஊருக்குள் சென்றேன். இங்கிலாந்து தேசத்திலுள்ள நாட்டுப்புற வீடுகளைப் போலக் கட்டியான சிகப்புச் செங்கற்களால் கட்டப்பட்ட மூன்று மாடி, நான்கு மாடி வீடுகளையும் அதைச் சுற்றிப் பச்சைப் பசேரென்ற வயல்களையும் அங்கு நான் கண்டேன்.

தலையில் மூட்டையைக் கண்டதும் அக்கிராமத்திலுள்ள மக்கள் தங்கள் வீட்டு வாசலண்டை வந்து நின்று என்னை உற்று நோக்கி எள்ளி நகைத்தனர். சிலர் தங்கள் வீட்டு மாடியில் நின்று கைதட்டி "தேல்வாலா" "தேல்வாலா" (எண்ணெய் வியாபாரி) என்று கூறிப் பரிகசித்தனர். அவர்களின் இவ்வித நகைப்பும், பரிகாசமும் என்மேல் ரோஜா மலர்களைத் தூவி என்னைத் தங்கள் கிராமத்திற்கு அந்த மாலை வேளையில் வரவேற்பதுபோன்றிருந்தது. நன்றாகப் பரிகசித்துச் சிரியுங்கள் - என் முகத்தில் காரி உமிழுங்கள், அந்த ஆனந்த பாக்கியத்திற்குத்தானே நான் ஏங்கிக் கிடக்கின்றேன். திடீரென்று ஒரு படித்த வாலிபன் என்னை நிற்கும்படிக் கூறி ஓடோடி வந்தான். அவன் என்னண்டை வந்து என் பிரயாணங்களைப்பற்றிய விபரத்தைக் கேட்டான். வந்த நோக்கத்தைத் தெரிவிக்காமல் தேவ ஞானத்தோடு காரியங்களைப் பகிர்ந்து கொண்டேன். கிராமத்தில் எங்கே இராத்தங்கலாமென்று அவனிடம் நான் கேட்டபோது அவன் மிகுந்த சந்தோஷத்துடன் தன் பின்னால் வரும்படி என்னிடம் கூறி எங்கோ என்னை அழைத்துச் சென்றான். இறுதியாக ஒரு பெரிய வீட்டுக்குள் என்னைக் கொண்டுபோய்விட்டான். அங்கே ஒரு அழகிய நேப்பாளப் பெண்ணும், அவளுக்கு உதவியாக ஒரு பையனும் இருந்தனர். "இங்கே நீங்கள் இராத் தங்கிக் கொள்ளுங்கள். வீட்டின் மாடியில் படுக்க இடமுண்டு. பணம் கொடுத்தால் இரவில் ஆகாரம் தருவார்கள். நானும் எனது நண்பர்களும் கூட இரவில் இங்குதான் வந்து ஆகாரம் புசித்து இளைப்பாறுவோம்" என்றான். எல்லாம் எனக்குப் புதிராகவிருந்தது. இருள் சூழ்ந்துவிட்டது. வீதியிலே வீடுகளின் திண்ணையில் படுக்கத் திண்ணைகளுமில்லை. அந்தப் பெண்ணும் புன்முறுவல் பூத்து என்னை அன்புடன் வரவேற்றுப் பேசினாள்.

சிம்சோன் காசாவிலுள்ள வேசியின் வீட்டில் மாட்டிக்கொண்டதுபோல நான் அங்கு சிக்கியிருந்தேன். நான் மாடிக்குத் தனித்துச் சென்று மின்விளக்கு இல்லாதபடியால் என்னிடமிருந்த மெழுகுவர்த்திகளைப் பற்றவைத்து ஆண்டவருடைய வார்த்தைகளை வாசித்துத் தியானித்துக் கொண்டிருந்தேன். இரவில் தனிமையில் இருந்த என்னிடம் அவளும் தனிமையில் வந்தாள். அவள் வந்த நோக்க

மறிந்தேன். அவள் என்னிடம் ஏதேதோ பேசினாள். நான் அதைச் சட்டை செய்யவில்லை. சற்றுநேரம் நின்றுபார்த்து விட்டுப்போய் விட்டாள்.

"பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" (ரோமர் 6:2) இவ்விதமான கொடும்பாவச் சோதனைகள் எல்லாம் எதிர்ப்படும் என்று அறிந்துதானே அருமை நேசர் பதினைந்து நாட்கள் உபவாசமிருந்து நேப்பாள ஊழியத்தை ஆரம்பி என்று என்னிடம் ஆரம்பத்தில் சொன்னார். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தமையால் தப்பினேன். கிறிஸ்துவுக்குள்ளாக இது எனக்குப் புதிய அனுபவமல்லவே! காசிப்பட்டணத்தின் சம்பவத்திலிருந்து இவற்றையெல்லாம் துச்சமாக மதித்துக் கடந்துசெல்லக் கர்த்தர் கிருபை கொடுத்துள்ளாரே! கர்த்தருக்கே மகிமை உண்டாகட்டும். கர்த்தருடைய கோபத்துக்கு ஏதுவானவர்கள் மட்டுமே அதிலே விழுவார்கள் (நீதி. 22:14)

நான் என்னைக் கர்த்தரின் காயப்பட்ட கரத்தில் ஒப்புவித்துத் துரிதமாகப் படுத்துக்கொண்டேன். அன்று என் கண்களுக்குத் தூக்கமே கிடையாது. விபச்சாரம், குடிவெறி, ஆடல் பாடல் இரவிலிருந்து விடியற்காலம் 3 மணிவரை அந்த வீட்டில் நடந்தது. பேய்களைப்போல எல்லாரும் ஆடிக்கொண்டிருந்தனர். அந்த விடிபகல் நேரம் குடிவெறியில் தள்ளாடித் தள்ளாடி சுமார் 10 வாலிபர்கள் நான் படுத்திருந்த அறையில் வந்து அனைவரும் ஏகமாகப் படுத்துக்கொண்டனர். அறை முழுவதும் ஒரே மதுபான நாற்றம். என்னருகில் படுத்திருந்தவன் குடிவெறியில் என்னை மிதித்துத் தள்ளினான். கடந்த இரவில் தெள்ளுப்பூச்சிகளை ஏவி விட்டு என்னைக் கடிக்கவிட்டிருந்த சத்துரு இந்த இரவில் குடிவெறியனை ஏவி விட்டிருக்கின்றான்போலும் என்றெண்ணிப் பொறுமையாக ஒரு மூலையில் சுருண்டு படுத்துக்கொண்டேன்.

அடுத்த நாள் எப்பொழுது விடியுமென்று காத்திருந்து துரிதமாகப் பயணப்பட்டுவிட்டேன். அந்த ஊரில் ஒரே ஒரு குடும்பத்தினருக்கு மாத்திரம் தேவனுடைய வார்த்தைகளைக் கொடுக்கத் தெய்வத்தால் ஏவப்பட்டு ஜெபத்தோடு அவற்றை விநியோகித்தேன். அதைப் பெற்ற அவர்கள் மிகுதியும் சந்தோஷமடைந்து அதற்கான விலைக்கிரயத்தையும் மனமகிழ்ச்சியுடன் எனக்குக் கொடுத்துவிட்டார்கள்.

அடுத்த நாள் பாக்லுங்கிலிருந்து புறப்பட்டுப் பக்கத்திலுள்ள கிராமங்களிலுள்ள மக்களுக்குத் தேவனுடைய வசனங்களைத் தாராளமாகக் கொடுத்தேன். பெரும்பாலும் சற்று கல்வியறிவுள்ள பெண் மக்களை மையமாகக் கொண்டு அவர்களுக்கே கொடுக்க முற்பட்டேன். ஆண்களை விடப் பெண்கள் சிறப்பாகக் கவனம் செலுத்துவார்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன். ஒரு வயலில் ஒரு

நேப்பாள வாலிபப் பெண் புல் அறுத்துக்கொண்டிருந்தாள். அவளுக்குக் கர்த்தருடைய வசனங்களைக் கொடுக்கும்படியாகத் தேவ ஆவியானவர் என் உள்ளத்தில் பலமாகத் தூண்டினார். "ஆண்டவரே அவளைப் பார்க்கும்போது அவளுக்குப் படிப்பறிவு இல்லாதது போலத் தோன்றுகின்றது" என்று நான் சொன்னேன். ஆண்டவருடைய உணர்த்துதல் என்னில் வலுமையாகவிருந்தபடியால் அவளண்டை சென்று எனது சட்டைப் பையில் வைத்திருந்த ஒரு நேப்பாள மொழிப் பிரதியைக் கொடுத்து இதை உன்னால் படிக்க முடியுமா? என்று கேட்டேன். மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுப் படித்தாள். என் சந்தோஷம் எல்லை தாண்டிச் சென்றது. ஒரு நேப்பாளப் புதிய ஏற்பாடு, இன்னும் சில அருமையான புத்தகங்கள், துண்டுப் பிரதிகளை ஜெபத்துடன் அவளுக்கு அளித்தேன். ஏதோ ஒரு புதையலைக் கண்டடைந்தவளைப் போன்று அனைத்தையும் பெற்று ஆனந்தமாகப் படிக்கத்தொடங்கினாள். புல் பெட்டியும், அரிவாளும் ஒரு பக்கம் வைக்கப்பட்டன. கருத்தோடு வாசித்தாள். அவள் இவ்விதமாகப் படிப்பதைக் கண்ட வழியில் செல்லுவோர் அவளண்டை சென்று அவர்களும் அவற்றை வாங்கிப் படித்தனர். அவர்கள் கரங்களிலிருந்து மீண்டும் அவற்றைப் பத்திரமாக வாங்கி வைத்துக் கொள்ளுவாள். அவளுக்கு எதிரேயுள்ள மலையில் நான் எனது வழியே ஏறிச் செல்லச் செல்லத் திரும்பித் திரும்பி அவளையே நான் பார்த்துக் கொண்டே சென்றேன். அவள் மீண்டுமாகப் புல் அறுக்க ஆரம்பிக்கவே இல்லை. நான் முழு மலை ஏறி மறையும் வரை அவள் அவற்றை வாசித்துக் கொண்டேயிருந்தாள். கர்த்தர் தம்முடைய வசனத்தின் மூலம் அவளைச் சந்தித்துத் தம்முடைய பிள்ளையாக மாற்றியிருப்பார் என்பதை நான் கர்த்தருக்குள் திட்டமாக விசுவாசித்து அவரை ஸ்தோத்திரிக்கின்றேன். அந்த தவனமுள்ள ஆத்துமாவின் பெயர் "மைன" என்பதாகும். அன்புகூர்ந்து அந்தப் பெண்ணை உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள். அவள் இன்று ஒரு அந்தரங்கக் கிறிஸ்தவளாகவிருந்து தனது அருமை இரட்சகரையும், பாவியாகிய என் மூலம் அவளுக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தையும் நினைவுகூர்ந்து கொண்டிருப்பாள். ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக. இப்படி அநேக நேப்பாளப் பெண்களின் கரங்களில் சுவிசேஷம் அளிக்கப்பட்டுள்ளன. கர்த்தருக்கென்று நான் இது விஷயத்தில் மிகவும் துணிந்து செயல்பட்டேன். வீடுகளுக்குள்ளும் கூடத் துணிச்சலுடன் சென்று பெண்களுக்கே தேவ வசனங்களை ஆத்தும பாரத்தோடு அளித்தேன். மோட்சத்தில் நாம் பலன் காண்போம். அல்லேலூயா.

மழைகள் நின்று நல்ல வெயில் இருந்தமையால் ஆண்டவருடைய ஊழியத்தைச்செய்ய மனமகிழ்ச்சியும், புதிய தெம்பும் உண்டாயிற்று. அன்று நடந்து, நடந்து ஊழியம்செய்து மாலை சுமார் 5மணிக்குப் பாலா என்றதொரு கிராமத்தின் அடிவாரம்வந்து சேர்ந்

தேன். இரவில் இராத்தங்க அந்தக் கிராமத்திற்குச் சென்றுவிட வேண்டுமென்று மனதில் நிர்ணயம் பண்ணிக்கொண்டேன். கழுகு தனது கூட்டை ஆகாயத்திலுள்ள மகா செங்குத்தான மலைப்பாறை விளிம்பில் கட்டியிருப்பதைப்போன்று 30 வீடுகளுக்கும் குறைவான அக்கிராமம் வானத்துக்கும், பூமிக்கும் நடுவாக அந்தரத்தில் மேகங்களுடன் விளையாடிக் கொண்டிருந்தது. இதுவரையான எனது சுவிசேஷப்பயணங்களில் மகா செங்குத்தானதோர் மலைப்பாதை ஏறினேன் என்றால் இது ஒன்றேதான். “கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்...” (சங். 29:11) என்ற திவ்விய வார்த்தையின்படி அந்த அன்பின் கண்மணிதான் என்னைக்கூட்டிச் சென்றார். இரத்தாசயம்கூட வெடித்துவிடும் அளவுக்கு மூச்சுவாங்கினாலும் கர்த்தர்தாமே எனக்கு மகாபெரிய பெலனாயிருந்தார். இறுதியாக அந்த நேப்பாள கிராமத்திற்கு வந்து சேர்ந்தேன். அக்கிராமத்திலுள்ள மக்களுக்குத் தேவனுடைய வார்த்தைகளடங்கிய புத்தகங்கள், கைபிரதிகளை மிகுந்த ஜெபத்துடன் விநியோகித்து முடித்தேன். அன்று இரவு அந்தக் கிராமத்திலுள்ள ஒரு அன்புள்ளம் கொண்ட வீட்டில் எனக்கு உணவளித்தார்கள். வெறும் அரிசி சாதம், எருமைமாட்டு வெண்ணெய், மசலாவின்றி அவித்து உப்பிட்ட வெறும் காய்கறி இதுவேதான் உணவு. கடும் களைப்புடனும் மிகுந்த பசியுடனுமிருந்த எனக்கு அந்தபோஜனம் தேனிட்ட பணியாரமாயிருந்தது. அன்பின் கர்த்தருக்கு நன்றிசெலுத்தி அந்த ஆகாரத்தைப் புசித்துவிட்டு அவ்வீட்டு வெளித்திண்ணையிலேயே ஜெபித்துப் படுத்துக்கொண்டேன். தேவனுடைய சுவிசேஷத்தின் பொருட்டு அக்கிராமத்திற்குச்சென்று சுவிசேஷம் அறிவித்து அங்கு இராத்தங்கிய முதல் சுவிசேஷகன் பரதேசியும், பாவியுமாகிய நான்தான் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. அல்லேலூயா. துதிக்குப்பாத்திரர் அவர் ஒருவரே (ஏசா. 42:8) மேன்மை பாராட்ட இடமில்லை, அது நமது கடமை (1 கொரி. 9:16) அன்பரின் ஜீவனுள்ள நாமம் வாழ்க.

சிறுவனாக வீட்டிலிருக்கும்போது இரவில் தனிமையில் படுக்கக் கடுமையாக அஞ்சி நடுங்குவேன். அம்மா அருகில் படுத்திருந்தாலும் கண்விழிக்கும்போதெல்லாம் ஒரு கரத்தால் அவர்களைத் தொட்டுப் பார்த்துக் கொண்டுதான் தூங்குவேன். அந்த நாட்கள் யாவும் கடந்துவிட்டன. இப்பொழுது பயம் முற்றும் பறந்துவிட்டது காரணம், இருதயத்தினுள் பிரவேசித்த பூரண தேவ அன்பு பயத்தைப் புறம்பே தள்ளிவிட்டது (1 யோவா. 4:18) இரவில் படுக்கும் நேரத்தில் கடிகாரத்தையும், காலில் அணிந்திருக்கும் சப்பாத்துக்களையும் பொதுவாகக் கழற்றி அருகில் வைத்து விட்டுப் படுத்திருக்கும் நான் அன்றையதினம் அவ்வாறாகச் செய்யத் தேவன் என்னை அனுமதிக்கவில்லை. பிரயோஜனமாயிருக்கிறதை போதிக்கும் தேவனல்லவா அவர் (ஏசா 48:17) ஒன்றையும் கழற்றாமல்

துணிப்பையை என் பக்கத்தில் வைத்துக்கொண்டு மட்டற்ற களைப்பின் மிகுதியால் அப்படியே துயிலில் ஆழ்ந்தேன். எனது ஆழ்ந்த தூக்கத்தில் ஒரு சிறுவன் என்னைத் தட்டி எழுப்பி "மகராஜ், இது திருடர் பயம் நிறைந்த இடம், உங்கள் பையை வீட்டிலுள்ளவர்களிடம் கொடுத்துவிடுங்கள்" என்று நேப்பாள மொழியில் கூறினதை நான் புரிந்து கொண்டு எனது பையை வீட்டிலுள்ளவர்களிடம் கொடுத்து விட்டு மீண்டும் நித்திரை கொள்ளத் தொடங்கினேன். கடுங்குளிர் வீசிக்கொண்டிருந்தது. மழை பெய்து கொண்டிருந்ததுடன் மஞ்சு மூட்டமும் மூடிக்கொண்டிருந்தது. எவ்வளவு நேரம் நான் தூங்கினேனோ எனக்குத் தெரியாது. நான் கண்விழித்தேன். உடனே ஜெபிக்க விரும்பி மணி என்னவிருக்கும் என்பதனை அறியும் பொருட்டாகத் தலைக்கு அருகில் நான் வைத்திருந்த டார்ச் விளக்கைத் தேடினபோது அதை நான் காணவில்லை. என்ன செய்வதென்றறியாமல் அப்படியே சற்றுநேரம் படுத்துச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது எனது காலை ஒருவன் வந்து அசைத்துப் பார்ப்பதைக் கண்டு திடுக்கிட்டு ஜல்தியாகப் படுக்கையிலிருந்து எழும்பவும் என் தலைமாட்டிற்கு மேலிருந்த மொட்டைச் சுவரிலிருந்து ஒருவன் கீழே குதித்து விழுந்து ஓடும் சத்தம் கேட்டு வீட்டிலுள்ளோரைக் கதவைத் தட்டிக் கூப்பிட்டேன். அவர்கள் கதவைத் திறந்து விபரம் கேட்டனர். நான் எனது டார்ச் விளக்குத் திருட்டுப்போனதையும், மற்ற சங்கதிகளையும் சொன்னபோது "நள்ளிரவில் திருடர்கள் வந்த காலடிச் சப்தங்களை நாங்களும் கூடக் கேட்டோம்" என்று என்னிடம் கூறினார்கள். இரவு நேரங்களில் எனக்கு மிகவும் பயனுடையதாயிருந்த அந்த டார்ச்சை நான் இழந்துவிட்டது மனதிற்கு மிகுந்த துக்கமாகவே இருந்தது. கர்த்தர் ஏதோ ஒரு நல்ல நோக்கத்தோடேயே இந்தக் காரியத்தை நம்மில் அனுமதித்திருக்கின்றார் என்று என் மனதைக் கர்த்தரில் திடப்படுத்திக் கொண்டு அவரை ஸ்தோத்திரித்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். கடிகாரம், சப்பாத்துக்கள், துணிப்பை எல்லாம் கொள்ளையடிக்கப்படாமல் பாதுகாத்த அன்பின் கண்மணிக்கு என்ன ஈட்டைச் செலுத்தக்கூடும்?

நான் நடந்துவந்த வழிகளையெல்லாம் எனது மனக்கண்களுக்கு முன்னர் கொண்டுவந்து அவை யாவற்றையும் மீண்டும் ஒருமுறை நாம் எவ்வாறு கடந்துசெல்லப் போகின்றோம் என்பதை நினைக்கவே என் கால்களும், சரீரமும் நடு நடுங்கின. அன்னாளைப் போல என் உள்ளத்தை அந்தக் காலை சமயத்தில் தேவசமூகத்தில் ஊற்றி ஜெபித்தேன். அந்தநேரம் என் இருதயத்திற்கு வந்த தேவ வசனம் உபாகமம் 1:31 தான். "ஒரு மனிதன் தன்பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல நீங்கள் இவ்விடத்திற்கு வருகிற வரைக்கும் நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டுவந்ததைக் கண்டீர்களே".

என்னையும் அவ்வாறே தூக்கிச்சுமந்து செல்லும்படியாக அன்புத் தகப்பனின் கரத்தில்சமூலமாகஎன்னை அர்ப்பணித்துவிட்டு, முந்திய இரவில் எனக்கு உணவளித்துத் தங்கள் வீட்டுத் திண்ணையில் படுக்க இடமளித்த அன்புள்ள மக்களுக்கு என் ஆழ்ந்த நன்றியைக்கூறி சூரியன் உதயமாகு முன்னரே பாலா கிராமத்தை விட்டுக் காத்மாண்டுவுக்குத் திரும்பலானேன். அநேகமாக நான் கொண்டுசென்ற புத்தகங்களும், கைபிரதிகளும் முடிந்துபோயிற்று. கொஞ்சம் மாத்திரமே மீதமாக இருந்தன.

வரும் வழியில் ஒரு கிராமத்திலுள்ள ஒரு அன்பான மனிதனிடம் ஊன்றி நடக்க ஒரு தடியையும் கேட்டுப் பெற்றுக்கொண்டேன் தடியின்றி இந்த மலைநாடுகளில் பயணம் செய்தல் மகா கஷ்டமாகும். அன்றைய இராக்காலத்தை மீண்டுமாக பாக்லுங்கிலுள்ள மற்றொரு வீட்டில் விலைமாதரின் உபத்திரவமின்றி ஆறுதலுடன் இளைப்பாறிக் கதிரவன் தோன்று முன்பே பாக்லுங்கிலிருந்து எனது பயணத்தைத் தொடங்கினேன். அந்த பேரூரைக் கடந்து ஊரின் கடைசி எல்லைக்கு நான் வருகையில் "பின்னால் திரும்பிப்பார்" என்றதான அருமை நேசரின் அன்புக் குரலை என் உள்ளத்தில் கேட்டுப் பின் நோக்கிப் பார்த்தேன். அப்படியே அந்தக் காட்சியைக் கண்டு ஸ்தம்பித்து நின்றேன். பாக்லுங் ஊரையே தனது கரத்தின் அரவணைப்புக்குள் வைத்துப் பிடித்துக் கொண்டிருப்பதைப் போன்று தவளகிரி வெண்பனி மலைச் சிகரம் மாசு மறுவின்றி, மேக மூட்டம் எதுவுமின்றி எங்கிருந்தோவரும் சூரியக் கதிர்கள் பட்டு வெட்டி, வெட்டிப் பிரகாசித்துக் கொண்டேயிருந்தது. அந்த இடத்தை விட்டு நகர என்னால் கூடாதுபோயிற்று. ஆண்டவரின் அதிசயப் படைப்பின் மாட்சி என்னைப் பிரமிக்கப் பண்ணிற்று. கொஞ்சதூரம் செல்லுவேன், பின்னர் திரும்பிப் பார்ப்பேன், மீண்டும் சென்று மறுபடியும் பின்னிட்டு நோக்குவேன். எனது பூவுலக வாழ்வின் இறுதியாக அந்த வெண்பனிச் சிகரத்தைக் கடைசியாக ஒருமுறை என் அகங்குளிரப் பார்த்துக் கர்த்தருக்கு அநேக துதி செலுத்திவிட்டுப் பள்ளத்தாக்கினுக்குள் இறங்கி என் பயணத்தைத் தொடர்ந்தேன். தவளகிரி சிகரத்தின் பூரண அழகை பாக்லுங்கைத் தவிர நேப்பாள நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் பார்க்கவியலாது என்று பின்னர் நான் கேள்விப்பட்டேன். ஆ, கர்த்தர் எத்தனை அன்புள்ளவர்!

பயணப்பாதையில் ஆங்காங்கு தேவ ஏவுதலின்படி சுவிசேஷப் பிரதிகளை விநியோகித்துக் கொண்டே நண்பகல்நேரம் குஸ்மா வந்து சேர்ந்தேன் பயணக்களைப்பு, கடும்பசி காரணமாக ஒரு வீட்டில் உணவு கேட்டேன். அதற்கான பணத்தைத் தருகின்றேன் என்று சொன்னமையால் சற்று காத்திருக்க என்னைச் சொல்லிவிட்டு ஒரு சிகரெட்டையும் பற்றவைத்துப் புகையை ஊதிக்

கொண்டே ஒரு பெண் ஆகாரத்தை வெகுதுரிதமாக ஆயத்தம் செய்தாள். ஆகாரத்தை தயார்பண்ணுவதற்குள்ளாக ஏதாவது ஒரு ஊழியத்தைச் செய்துவிடலாம் என்றெண்ணித் தெருவில் கோதுமையைக் காயவைத்துக் கொண்டிருந்த ஒரு முதியவருக்குக் கர்த்தருடைய வார்த்தைகளடங்கிய சில அருமையான பிரதிகளையும் ஒரு புத்தகத்தையும் ஜெபத்துடன் அளித்தேன். அவரடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை. அவருடைய வாழ்நாளில் முதன் முறையாக அதனைப்பெற்றிருந்தார் என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட "மைன" என்ற பெண்ணைப்போன்று தாத்தாவும் தன்னை மறந்து ஆழ்ந்து படிக்கத் தொடங்கிவிட்டார். கோழிகள் எல்லாம் காயவைத்திருக்கும் கோதுமையைத் தின்பதைக்கூட அவர் கவனிக்கவில்லை. படிப்பது தேவ வார்த்தைகள் அல்லவா! கர்த்தர் கிரியை செய்கின்றாரே! தாத்தாவுக்காக நான் கோழிகளைத் துரத்திக்கொண்டு அதேநேரம் கர்த்தர் அந்த ஆத்துமாவைச் சந்திக்கும்படியாக ஊக்கமாக ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். எனக்கு ஆகாரம் தயார் ஆகும்வரை நான் அப்பணியைச் செய்தேன்.

அவருக்குக் கொடுக்க என் கைவசம் ஒரு நேப்பாள புதிய ஏற்பாடு இல்லாமற்போய்விட்டதே என்று என் உள்ளம் எனக்குள் உருகிக் கரைந்தது. என் கவலை எல்லை கடந்து சென்றது. காத்மாண்டு சென்றதும் முதல் காரியமாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தான்சேனிலிருந்து அவருக்கு ஒரு நேப்பாள புதிய ஏற்பாடும் இன்னும் பயனுள்ள சில புத்தகங்களும் தபால் வழியாக அவருக்கு நானே அனுப்பிவைத்தேன். அவருடன் தொடர்பு கொள்ளும்படியாக அந்த முதியவரின் முகவரியையும் காத்மாண்டுவிலுள்ள கர்த்தருடைய பிள்ளைகளிடம் விட்டு வந்திருக்கின்றேன். கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள்.

கீழே நான் குறிப்பிடப்போகும் சரித்திரம் வெகுகாலத்திற்கு முன் நிகழ்ந்ததோர் சம்பவமாயினும் இந்த நாட்களுக்கான மிகவும் அழுத்தமானதோர் செய்தியை அது தன்னகத்தே உடையதாயிருக்கின்றது:-

பிரான்ஸ் தேச அரசனாயிருந்த நான்காம் ஹென்றி என்பவன் ஆல்வா நாட்டுப் பிரபுவினிடம் "சமீபத்தில் நிகழ்ந்த சூரியகிரகணத்தைக் கவனித்தீர்களா?" என்று வினவினான். "இல்லை" என்று பதிலளித்தார் பிரபு. "பூமியிலே நான் செய்யக்கூடிய காரியங்கள் எவ்வளவு, எவ்வளவோ இருக்கத்தக்க வானத்தை நான் நோக்கு

வதற்கு நேரமேது?" என்று கூறிவிட்டார். இதை அடிப்படையான தோர் உதாரணமாகக்கொண்டு தாமஸ் புருக் என்பவர் இவ்வித மாக எழுதுகின்றார்:-

மெய்தான், கிறிஸ்து இரட்சகரையோ அல்லது அவரின் எக் காலத்தும் நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்திற்கடுத்த காரியங் களையோ மனிதன் சிந்திப்பதற்கு மாறாக அவனின் பொன்னான காலமும், அவனது முழு இருதயமும், பூமிக்குரிய காரியங்களி லேயே பின்னிப் பிணைந்து கிடப்பது எத்தனை துயரத்திற்குரிய காரி யம்! அழிவுக்கு ஏதுவான இந்த உலகத்திற்குரிய காரியங்களுக் காக மாத்திரம் கவலை கொள்ளும் மனிதன் எத்தனை மதியற்றவன்! உலகப்பற்று, பாசங்கள் எல்லாம் ஒரு கணப்பொழுது மட்டுமே இன்பம் தந்து கடந்து செல்லக்கூடியவைகள். பரலோகத்தில் சதா காலமும் நிலைத்து நிற்கக்கூடிய வெகுமானங்களை அவைகள் நமக்கு ஒருக்காலும் அளிக்கவியலாது.

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதி யையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத். 6:33) என்று அருமை இரட்சகர் கூறினார்.

இயேசு இரட்சகரின் எச்சரிப்பின் நற்செய்தியைப் புறம்பாக்கி அதற்குப் பதிலாக இவ்வுலகத்தின் அநித்தியமான உலக இன்பங் களை அனுபவிக்கத் தன்னை விற்றுப்போட்டதான ஊர், பேரில்லாத ஆசிரியன் ஒருவன் தனது ஆழ்ந்த துயரத்தின் நாட்களில் இவ் வாறு எழுதி வைத்திருக்கின்றான்:-

"எவ்வளவு முட்டாள்தனமாக நான் என்னையே செலவு செய்துவிட்டேனே! என் ஆயுட்காலம் முழுமையும் மன வியாகுலத் தில் அன்றோ கழிந்துபோயிற்றே! சூரியன் தன் பாதையிலும், சந் திரன் தன் மார்க்கத்திலும் சென்று தங்கள் ஒளிக்கதிர்களை எனக்கு இலவசமாக அளித்துக் கொண்டிருந்ததான அந்த அரும் பெரும் அற் புத நாட்களை எல்லாம் நான் எத்தனை நிர்விசாரமாகப் பாழ்ப்படுத்தி விட்டேனே! ஐயோ, அந்த அற்புத ஒளிக்கதிர்கள் என்னை நித்திய மாக அழிப்பதற்கென்றல்லவா என்மீது பூரணமாகப் பிரகாசித்திருக் கின்றது. மறைந்துபோகும் நிழல்களை நான் எட்டிப் பிடிப்பதற் கென்று பின் தொடர்ந்து ஓடி வீணான எண்ணக் கனவுகளையல் லவா நான் என் உள்ளத்தில் வரவேற்று உபசரித்துவிட்டேன். புழுதியை நான் எனது பொக்கிஷ இருப்பாகச் சேர்த்து வைத்து காற்றுடன் அல்லவா நான் இதுகாறும் விளையாடிக் கொண்டிருந் திருக்கின்றேன்.

இந்த மதிகெட்ட வாழ்க்கை நான் வாழ்ந்ததைவிட மிருகங் களுடன் சேர்ந்து நான் வயல்வெளிகளில் புல்லை மேய்ந்து வனங் களில் வாழும் பறவைஇனங்களுடன் கூடிச்சேர்ந்து நான் அவை

களுடன் பாடியிருந்தாலும் தேவனின் மகிமையான நோக்கங்கள் என் மூலம் நிறைவேறியிருக்கும்! ”

அன்பானவனே, நித்திய மகிமையின் விலைமதிப்பின் வெளிச்சத்தில் தேவ பெலன் கொண்டு பூமிக்குரியவைகளையல்ல, புழுதிக்குரியவைகளையல்ல, பரலோகத்துக்குரிய, இயேசு இரட்சகர் வாழ்கின்ற பேரின்ப நாட்டுக்குரிய மேலானவைகளைத் தேடு.

வேதப்புத்தகமே! விலைபெற்ற செல்வம் நீயே!!

எனது வாழ்க்கையை வேத வசனத்தின் வெளிச்சத்தில் 60 ஆண்டு காலத்திற்கு மேலாகப் பாதுகாத்து வந்திருக்கின்றேன். இந்த நீண்ட கால அனுபவ முதிர்ச்சியின் அடிப்படையில் “வேதாகமத்தைப்போல் ஓர் ஒப்பற்ற புத்தகம் வேறெதுவுமில்லை ” என்று நான் திட்டமாகக் கூறுவேன். அது ஒரு அதிசய இலக்கியக் கருவூலம், வற்றாத ஞான நீரூற்று, ஆச்சரியங்களில் அதி ஆச்சரியம், இரகசியத்தின் மாபெரும் வெளிப்பாடு, உத்தம நடக்கையின் ஒப்பற்ற வழிகாட்டி, மனுஷீக வார்த்தைகளால் விவரித்துக் காட்டமுடியாத ஆறுதலின் ஊற்று. இந்த மாட்சிமை பொருந்திய ஜீவ புத்தகத்தின் பெருமையை மட்டுப்படுத்தித் தரக்குறைவாகப் பேசும் மனிதர்களின் வார்த்தைகளுக்கு உன் கவனத்தைத் திருப்பாதே. நான் உனக்குச் சொல்லுகின்றேன், அறிவில்லாமல் அவர்கள் அப்படிப் பேசுகின்றனர். அது தன்னளவில் தேவனுடைய வார்த்தையாகவே இருக்கின்றது. அது காண்பிக்கும் வழியிலேயே நீ அதனைக் கற்றுக்கொள்ள ஆசை கொள். அதின் கட்டளைகளின்படி நீ ஜீவியம் செய். அதின் பரலோகத் தூதுகளை விசுவாசி. அதின் வெளிச்சத்தில் உன் பாதச்சுவடுகளை எடுத்துவை. வேதாகமத்தை அறிந்து கொள்ளமுடியாத அளவு எந்த ஒரு மனுஷனும் அத்தனை கல்வி ஞானமற்றவனாய்ப் போய்விடவில்லை. அதே சமயம், அதின் போதனைகள் தனக்குத் தேவையற்றவைகள் என்று சொல்லி வேதத்தைப் புறக்கணித்து வைக்கும் அளவில் எந்த ஒரு மனுஷனும் ஞானவான் ஆகிவிடவுமில்லை.

(SAMUEL CHADWICK)

Edited and Published by N. Samuel, Kotagiri-643217. Nilgiris.
Printed at the Thoothan Press, Newport Street, Nagercoil